## என் நன்றி



இந்த நூலாசிரியரான ஜெயராமன் என்கின்ற நான் ஒரு ஓய்வு பெற்ற அரசு அதிகாரி. 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றதும் ஒரு பொழுது போக்காக சாந்திப்பிரியா என்ற புனைப் பெயரில் ஆன்மீக சம்மந்தப்பட்ட கட்டுரைகளை மட்டும் எழுதத் துவங்கி நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், கதைகள் எழுதினேன். அதைத் தவிற மூன்று மகான்களைப் பற்றிய சரித்திரத்தை மூன்று ஆசிரமங்களுக்காக எழுதினேன். இணையதளத்தில் - முருகப் பெருமான் பற்றிய ஆராய்சி கட்டுரைகள் , இரமண மகரிஷியின் கதைகள்/கட்டுரைகள், அய்யா வழி போன்ற பலவும் என் மொழி பெயர்பில் வெளி வந்துள்ளன. அந்த நேரத்தில்தான் மஹாவம்சத்தை மொழி பெயர்க்க சந்தர்ப்பம் திரு பாவன்த பெரிரா *(Bawantha Perera)* மூலம் வந்த பொழுது ஒரே மூச்சில் என்று கூடக் கூறும் விதத்தில் தினமும் நான்கு மணி நேரம் அமர்ந்து அதை படித்துப் எழுதினேன். படிக்கப் படிக்க என்ன அற்புதம், என்ன அருமை, என்ன அதிசயம் என்ற நினைவு அலையலயாய் எழுந்து மறைந்தது. எழுதி முடித்த எனக்கு கடலில் சங்கமித்த நதிபோல மனம் ஆயிற்று. அந்த அனுபவத்தை எப்படி வர்ணிப்பது என்று புரியவில்லை. அதுவும் கூட புத்த பிரானின் கருணையோ ?

20.12.08 சாந்திப்பிரியா